
# புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிப்பவர்களுக்கான வழிகாட்டுதல்கள்

Download P T Studies at no cost from www.paul-timothy.net

**பயிற்சியாளர் ஜெபம்:**

அன்பான கர்த்தாவே பரிசுத்த ஆவியின் வல்லமையால், நீர் கொடுத்திருக்கும் மந்தையை மேய்க்கும் படியாக, உமது வார்த்தைகளின் மூலமாக புதிய மேய்ப்பர்களுக்குப் போதிக்க எங்களுக்கு உதவி செய்யும்.





நாங்கள் இதை எங்கள் கர்த்தரும் மேய்ப்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கேட்கிறோம்.

**வழிகாட்டல் 1. மூன்று பயிற்சி முறைகளை உபயோகித்துப் புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவித்தல்.**

மாதிரி காட்டுதல், அறிவுரை கூறுதல், வகுப்பறையில் விரிவுரையாற்றுதல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு சமநிலையைப் பேணுக.

மந்தை பெருகுவதை உறுதி செய்யும்படியாக புதிய மேய்ப்பர்களை உருவாக்க வேண்டும். இதற்கு இயேசுவும், அப்போஸ்தலர்களும் செய்தது போல, மூன்று பயிற்சி முறைகளுக்கும் இடையில் நல்ல ஒரு ஆரோக்கியமான சமநிலையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

**முதல் முறை மேய்ப்பர்களுக்கு மாதிரிகள் (உதாரணங்கள்) மூலம் திறனை வளர்த்தல்**



அந்தந்த வாரங்களில் புதிய தலைவர்களுக்கு மேய்க்கும் திறனை மாதிரிகள் மூலம் காட்டுக.

**இரண்டாம் முறை : சிறிய குழுக்களுக்கு அறிவுரை கூறுதல்**

சிறுசிறு குழுக்களாகக் கூட வேண்டும். இதன் மூலம் தங்கள் மந்தை என்ன செய்து கொண்டு இருக்கிறது என்பதை பயிற்சி பெறுவோர் அறிவிப்பதை நீங்கள் கேட்க முடியும். பின் ஒவ்வொரு மந்தையின் தேவைக்கும் ஏற்றபடி தேவ வார்த்தையை நடைமுறைப்படுத்த முடியும். அடுத்தவாரம் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் திட்டமிட பயிற்சி பெறுவோர்க்கு உதவுங்கள்.

**மூன்றாவது முறை : பெரிய குழுக்களுக்கு விரிவுரை ஆற்றுங்கள்**



அவ்வப்போது பெரிய குழுக்களுக்கு கருத்தரங்குகளை நடத்துங்கள்.

**முறை 1 : இன்னும் கற்றுக்கொண்டிருக்கும் உதவியாளர்களுக்கு மேய்க்கும் திறன்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.**

இயேசுவும், அப்போஸ்தலர்களும் போதித்து, குணமாக்கி, ஆலோசனைகள் கூறி தங்கள் முன்னுதாரணங்கள் மூலம் சீஷர்களுக்கு மேய்க்கும் திறன்களை வளர்த்தது போலவே, உதவியாளர்களுக்கு இன்னும் தெரியாத, மந்தைகளின் மேல் கவனம் செலுத்துதல் போன்ற பணியின் பல அம்சங்களை உதாரணங்கள் மூலம் விளக்க வேண்டும்.

ஆராதனையின் போது மட்டுமல்லாமல், வார நாட்களிலும் மேய்க்கும் திறன்களை உதாரணம் காட்டி விளக்கவும். பயிற்சியாளர் தன் மந்தையைக் கவனிப்பதை பயிற்சி பெறுபவரும் சிலசமயம் உடன் சென்று கவனித்து நோக்க முடியும். சில சமயம் பயிற்சி பெறுபவர் தன் மந்தையைக் கவனிப்பதை பயிற்சியாளர் சென்று கவனித்து உதவி செய்யலாம்.

முறை 2 : சிறு குழுக்களுக்கு அறிவுரை கூறுதல்

இரண்டு முதல் ஐந்து பேர் அடங்கிய சிறு குழுக்களாக பயிற்சி பெறுபவர்கள் கூடட்டும். இது மிகவும் சிறிய குழுவாக இருக்க வேண்டும். அப்போதுதான் பயிற்சியாளர், ஒவ்வொரு பயிற்சிபெறும் மாணவரும் தங்கள் மந்தை செய்து கொண்டிருப்பதைக் கூறக் கேட்டு, ஒவ்வொரு சபையிலும் உள்ள தேவைகளையும், வாய்ப்புகளையும் சந்திக்க முடியும். பொதுவாக ஒன்று, இரண்டு, அல்லது மூன்று சபைகளைச் சார்ந்த பயிற்சி பெறும் மாணவர்களே அறிவுரையாளரை சந்திப்பது வழக்கம்.

முறை 3 : பெரிய கூட்டங்களில் எல்லா சபைகளுக்கும் பொருந்தும் பொதுவான சத்தியங்களை போதித்தல்

எல்லா மேய்ப்பர்களுக்கும் பொருந்தும் காரியங்களைப் போதிக்கும் மேய்ப்பர்களின் பெரிய கூட்டத்தை முடியும் போதெல்லாம் கூட்டவும்.

உங்கள் திட்டங்களை எழுதவும்

உதவிக்காக ஜெபிக்கவும். பின் இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்தது போல மூன்று வகையான போதனைகளையும் சமநிலைபடுத்தும்படியான திட்டத்தை எழுதவும்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## வழிகாட்டுதல் 2 **- பயற்சிபெறும் குழுவினருக்கு தேவைப்படும் பாடங்களைத் தெரிந்து கொள்க**

உங்கள் பயிற்சியாளர் அல்லது ஒருங்கிணைப்பாளரிடம் இருந்து ஒரு பவுல் - தீமோத்தேயு பயன்படுத்துவோர் பட்டியலைக் கேட்டு வாங்குங்கள். அல்லது, www.paul-timothy.net லிருந்து டவுண்-லோட் செய்யவும். டவுண்-லோட் மெனுவைக் 'கிளிக்' செய்யவும். உங்களுக்கு விருப்பமான படிவத்தை (format) தெரிந்து கொள்ளவும். மேலும், பயன்படுத்துவோர் பட்டியலின் 'ஓர் அச்சிடிப்படக்கூடிய வடிவத்தையும்' தேர்ந்து கொள்ளவும். (ஆரம்பத்தில் உள்ள ஆலோசனைகளை வாசியுங்கள்).

- பயிற்சியாளர்கள் சிறு குழுவாகக் கூடி பவுல்-தீமோத்தேயு பயன்படுத்துவோர் பட்டியலில் இருந்து பாடத்தைத் தெரிந்து கொள்ளவும்.
- பவுல் - தீமோத்தேயு பயன்படுத்துவோர் பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஊழியங்களின் பட்டியலிலும் சில உதாரணப் பாடங்களிலும் இருந்து பொருத்தமானதை தெரிந்து கொண்டு இப்போது பயிற்சி செய்யவும். உங்கள் மந்தை பயிற்சி பெறாதவற்றையோ அல்லது மந்தைக்கு இன்னும் பயிற்சி தேவை படுபவற்றையோ குறியீடு செய்யவும் [ ✓ ].

ஊழியங்களும் மாதிரிப் பாடங்களும் (பயன்படுத்துவோர் பட்டியலில் இருந்து)

| ஊழியங்கள் (புதிய ஏற்பாட்டின் படியான சபை நடவடிக்கைகள்) | புதிய மேய்ப்பர்களுக்கான மாதிரிப் பாடங்கள் (ஒவ்வொரு ஊழியத்திற்குமான பல பாடங்களில் ஒன்று மட்டுமே பட்டியலில் தரப்பட்டுள்ளது) |
|---|---|
| [ ] பவுல்-தீமோத்தேயு பாடங்களுக்கு அறிமுகம் | புதிதாகப் பயிற்சி பெறுவோருக்கான வழிகாட்டுதல்கள் Aof |
| [ ] நம்பிக்கையூட்டுதல், ஆலோசனை, சந்திப்பு | அச்சத்தையும் அவமானத்தையும் மேற்கொள்ளுதல் A2a |
| [ ] வேத ஆய்வு, விளக்கம், நடைமுறைப் படுத்துதல் | ஆதியாகமமும் முற்பிதாக்களும் P2a |
| [ ] சபை-ஸ்தாபிதம் சிறு குழுக்கள் பெருக்கம் | புதிய சபைகளையும், குழுக்களையும் ஆரம்பித்தல் C7a |
| [ ] சீஷர்களை உருவாக்குதல் இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் | நமது மாபெரும் இராஜாவான இயேசுக்குக் கீழ்ப்படிதல் F3a |
| [ ] சுவிசேஷம் அறிவித்தல், ஞானஸ்நானம், இரட்சிப்பு | இயேசுவுக்கு வல்லமையான சாட்சியாய் திகழ்தல் P5a |
| [ ] கொடுத்தல், பராமரித்து ஊழியம் செய்தல் | தாராளமாக கொடுத்த பர்னபா G1a |
| [ ] இயேசுவுக்குள் வளர்தல் உருமாற்றப்படும் குணநலன்கள் | மருரூபமாதலும் தெய்வீகப் பண்புகளும் C1a |
| [ ] மிகுந்த முக்கியத்துவம் உள்ள சரித்திர நிகழ்ச்சிகள் | கிறிஸ்தவத்தின் வரலாறு, முதல் 400 வருடங்கள் H4a1 |
| [ ] அன்பு, குடும்ப வாழ்க்கை, மற்றவர்களுக்கு சேவை செய்தல் ஐக்கியம் | மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் இரக்கத்தை வெளிப்படுத்துதல் L4a |
| [ ] ஊழியங்கள், வெவ்வேறு கலாச்சாரங்களில் பணிபுரிதல் | புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு ஊழியர்களை அனுப்புதல் S2a |
| [ ] அமைப்பும் தலைமையும் | தேவனளித்த வரங்களைக் கொண்டு சேவை புரிதல் S6a |
| [ ] ஜெபம், விசுவாசம், குணமாக்குதல் | இயேசுவின் நாமத்தினால் குணமாக்குதல் H2a |
| [ ] வேதத்தின் பிரகாரம் போதித்தலும் கதை கூறுதலும் | வேதத்தின் படி பிள்ளைகளுக்குப் போதியுங்கள் T1a |
| [ ] தலைவர்களுக்குப் பயிற்சி அளித்து அறிவுரை கூறுதல் | இயேசுவும் பவுலும் செய்ததுபோல புதிய தலைவர்களைப் பயிற்றுவியுங்கள் T3a |
| [ ] ஆராதனை, ஐக்கிய விருந்து, சிறப்பு விழாக்கள் | ஆரோனும் பிற துதி ஆராதனைத் தலைவர்களும் W2a |

ஒரு நல்ல பயிற்சியாளர் புதிய மூப்பர்களை ஒரு புதிய விசுவாசிகளின் குழுவில் வைத்து நியமித்து பயிற்றுவிக்கிறார். ஒவ்வொரு மந்தையிலும் என்ன குறை இருக்கிறதோ. அதை நிவிர்த்தி செய்வதற்கு மக்களை காரியங்கள் ஆற்றும்படி வழிநடத்த பயிற்சி பெறுபவர்களுக்கு அவர் உதவுகிறார் (தீத்து 1:5). சபைகளில் இருக்கும் குறைகளை அறிய பயிற்சியாளர்கள் தங்கள் சபை மக்கள் என்ன செய்கிறார்கள், என்ன செய்யவில்லை என்பதைக் கூறுவதை கவனமாகக் கேளுங்கள்.

"பயிற்சியாளர்களாகிய நாங்கள் எங்களிடம் பயிற்சி பெறுபவர்கள் கூறுவதை முதலில் கவனமாகக் கேட்கிறோம்."



- மாணவர்கள் முதல் பாடத்தில் தொடங்கி, ஒன்று, இரண்டு என்று கற்றுப் போகும் வரிசைக் கிரமமான ஒரு பாட திட்டத்தை பவுல்-தீமோத்தேயு பயிற்சி பின்பற்றவில்லை. மாறாக, உங்களது தற்போதைய தேவைக்கு ஏற்றபடி, பல வகையான ஆதாரங்களில் இருந்து நீங்கள் தெரிந்து எடுத்துக்கொள்ளலாம். மத்தேயு 13:52 ல் உள்ள வகைவகையான ஆதாரங்களை உபயோகிக்குமாறு போதகர்களை இயேசு வலியுறுத்துகிறார்.

- “வேதபாரகன் எவனும்.. தன் பொக்கிஷத்தில் இருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டு எஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்.”

- ஒவ்வொரு பாடமும், புதிய மேய்ப்பருக்கு ஒன்றும், அதே தலைப்பில் சிறுவர்க்கு ஒன்றுமாக இரண்டு பாடத் தொகுதிகளைக் கொண்டதாய் இருக்கும்.

**உங்கள் திட்டங்களை எழுதவும்**

உங்கள் மந்தையையோ அல்லது ஒரு புதிய மந்தையையோ மேய்க்க யாரை நீங்கள் போதித்து பயிற்றுவிக்கப் போகிறீர்கள்?

............................................................................................................

தங்கள் குடும்பத்தையும் தாங்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறவர்களையும் உடனடியாக கண்காணித்து மேய்க்க உங்கள் உதவியாளர்களுக்கு எவ்விதம் உதவி செய்வீர்கள்?

............................................................................................................

............................................................................................................


............................................................................................................

............................................................................................................

உங்களுக்கு யாராவது போதித்து வருகிறார்கள் என்றால், மேற்கண்ட ஊழியப் பட்டியலில் தேவை என்று நீங்கள் அடையாளப்படுத்தியதை அவருக்குத் தெரிவியுங்கள். அப்போது அவர் அதற்கு நிகரான பாடத்தையும், திறன் பயிற்சியையும் நீங்கள் பெற்றுக்கொள்ள உதவுவார்கள்.

நீங்கள் தெரிந்து கொண்ட ஊழியத்துக்கு நிகரான பாட எண் எது? (பாட எண், பாடத்தின் தலைப்புக்கு அடுத்து உள்ளது).

## வழிகாட்டல் 3 **வேதம் வலியுறுத்துகின்றபடியே அறிவுரை கூறி போதியுங்கள்.**



எப்படி பயிற்சி அளிப்பது என்பதற்கு இயேசுவும் பவுலுமே நமக்கு முன்னோடிகள். தலைவர்களை பயிற்றுவிக்க இயேசுவும் பவுலும் உபயோகித்த வழிகாட்டு-தல்களையே நாம் பயன்படுத்துகிறோம். புதிய மேய்ப்பர்கள் தங்கள் போதனையாளர்களை மாதத்துக்கு ஒன்று அல்லது இரண்டு முறை சந்திக்க வேண்டும். அவர்கள் கூறுவதை கவனித்துக் கேட்டு புதிய மேயப்பனின் மந்தைக்கு என்ன தேவை என்பதை அறிய வேண்டும். பின் போதனை-யாளர்கள் அந்த தேவைகளை மேய்ப்பர்கள் சந்திக்க அவர்களை அதற்கு ஏற்றபடி பயிற்றுவிக்க வேண்டும். மந்தை புதிது என்றால் பயிற்சி பெறுபவர்கள் அடிக்கடி தங்கள் அறிவுரையாளரை சந்திக்க வேண்டும்.

- புதிய மேய்பர்களுக்கே முக்கியமாக அறிவுரை தேவைப்படுகிறது. முதிர்ச்சி அடைந்த தலைவர்கள் அவ்வப்போது கருத்தரங்கங்களில் கலந்து கொண்டே கற்றுவர முடியும். ஒரு வல்லுநரின் ஆலோசனை தேவைப்படும் விசேஷமான பிரச்சினைகளுக்கு அவர்கள் அவ்வாறு அறிவுரை பெற்றுக் கொள்ளலாம்.

- 2 தீமோத்தேயு 2:2 கூறுவது போல, தானோ அல்லது தனது சபையோ கட்டி எழுப்பிய புதிய சபையின் மேய்ப்பர்களுக்கே பொதுவாக ஒரு தலைவர் அறிவுரை கூறி போதிக்கிறார்.


- ஓர் அறிவுரையாளர் வயது முதிர்ந்தவராகவோ, மிகவும் அனுபவம் வாய்ந்தவராகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தான் அறிவுரை அளித்து பயிற்றுவித்து வருபவர்களுக்கு முன், ஒரு மாத அனுபவம் உடையவராக இருந்தால் கூட போதுமானதாகும். புதிய பணியாளரின் தேவைகளை கருணையோடு புரிந்து கொள்ள முடிவதால் இது சாத்தியமானதாக இருக்கிறது. அறிவுரை கூறுவோர் சங்கிலித் தொடர் மூலம் இவரும் தன்னைவிட அனுபவம் பெற்றவரை சந்தித்து போதனைகள் பெற முடியும்.

பவுல் - தீமோத்தேயு பாடங்களைக் கொண்டு அறிவுரைத்து போதிப்பது (mentor) எளிதானதாகும். புதிய மந்தைகளுக்கான தேவைகளைப் பற்றி விளக்கும் பாடங்களை அளிப்பீர்களேயானால் புதிய மேய்ப்பர்கள் கூட தங்களை விடவும் புதிய மேய்ப்பர்களுக்கு போதிக்க முடியும். பவுல்-தீமோத்தேயு பாடங்களைப் போன்ற பாட திட்டங்களை பயன்படுத்துங்கள். நீங்கள் பயிற்றுவிப்போரின் மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யுங்கள். அறிவுரைத்து போதிப்பது பொதுவாகத் தற்காலியமானதே. புதிய விசுவாசிகளைக் கொண்ட புதிய சபைகளின் புதிய மேய்ப்பர்கள் "குழந்தையான மந்தைகளின்" "குழந்தைத்" தலைவர்களைப் போன்றவர்களே. புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு அவசரமான தொடர்ந்த கவனிப்பு தேவையாக இருப்பது போல இவர்களுக்கு ஏதோ ஒரு வகையான அறிவுரைகள் எப்போதும் தேவையாய் இருக்கும்.

புதிய தலைவர்களுக்கு சிறந்த முறையில் அறிவுரைத்து போதிக்க கணிசமான நேரம் தேவைப்படும். இதனால்தான் பெரிய குழுக்களுக்கு அவ்வப்போது கருத்தரங்கங்களை நடத்த வேண்டும் என்பது அவசியமாகியது. தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் போதனை செய்ய பவுல் ஒரு தகப்பனைப் போல கவனம் எடுத்து அதிக நேரத்தை செலவிட்டார். அவர்கள் முதிர்ச்சி அடைந்த போதோ அவர்களுக்கு அதிக கவனம் தேவைப்படவில்லையாதலால், மற்றவர்களை பயிற்றுவிக்கும்படி பவுல் அவர்களை விட்டு-விட்டார்.

பவுலின் அறிவுரைக்கும் போதகம் தங்களுக்கு சிறுத்துக்கொண்டே வந்தபோது, அவர்கள் தாங்கள் பவுலிடம் கற்றவற்றை புதிய தலைவர்களுக்கு அளித்து இந்த போதிக்கும் சங்கிலி வளரும்படியாகச் செய்தனர். புதிய ஏற்பாடு உரைப்பதை தாங்கள் செய்யக் கற்றுக்கொள்ளும் வரை புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல புதிய தலைவர்களுக்கும் சபைக-ளுக்கும் அறிவுரை தேவைப்படுகிறது.

**உங்கள் திட்டங்களை எழுதவும்**



யாருக்கு நீங்கள் அறிவுரைக்கப் போகிறீர்கள்?

......................................................................

எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?

......................................................................

## வழிகாட்டுதல் 4. **யாராவது ஒருவருக்கு பதிலளிக்கும் பொறுப்புடையவர்களாகவும் மற்றவர்களுக்கு உங்கள் நடிவடிக்கைகள் குறித்து அறிவிப்பவர்களுமாய் இருங்கள்**

கர்த்தரின் பணியை தலைமை ஏற்று நடத்துபவர்கள், பிற தலைவர்களுக்கு பதில் தரும் கடமை உடையவர்வள்.

நீங்களும் பிற தலைவர்களும் ஒருவருடைய ஊழியத்தை மற்றவர் சோதனை செய்ய வேண்டும். இது கட்டுப்படுத்த அல்ல. மாறாக உங்கள் ஊழியங்களை வளர்க்க ஒருவருக்கொருவர் உதவி செய்யவே.

ஒருவரை ஒருவர் நேசித்தால் இத்தகைய பொறுப்புடைமையில் பங்கேற்பது ஒரு ஆனந்தமான அனுபவம் ஆகும்.

அவ்வப்போது பிற தலைவர்களை சந்தித்து நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை அறிவிக்க வேண்டும். பிற தலைவர்கள் உங்கள் வேலைகளைச் சோதிக்காமல் நீங்கள் மக்களை வழிநடத்தினால் அது அலட்சியம் என்ற அழிவுக்குரிய பாவமாக மாறக் கூடும்.

முதன் முதலில் பவுல் எருசலேமில் உள்ள தலைவர்களுக்கு தான் செய்தவைகளைக் குறித்த பொறுப்பை ஒப்படைத்தார் (கலா. 2:1-2). பின், தங்களை பல ஜாதியார் மத்தியில் அனுப்பிய அந்தியோகியா சபைக்கு தாங்கள் செய்து வருகின்றவைகளை பவுலும், பர்னபாவும் அறிவித்தார் (அப். 13:1-3; 14:26-28).

நீங்களும் பிற தலைவர்களும் ஒருவரை ஒருவர் திருத்த வேண்டும் (கொலோ. 3:16). ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கையிட வேண்டும் (யாக்.5:16). பிற தலைவர்களின் ஆலோசனைக்கு செவிகொடுத்து, அவர்களது விமரிசனங்களைக் கேட்க வேண்டும்.

எல்லா மேய்ப்பர்களுக்கும் இந்த மேற்பார்வை அவசியமானதே. இதன் மூலம் ஒவ்வொருவரும் வேதாகமப்படியே செயலாற்றுகிறார்களா என்பதை தலைவர்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். இது நீங்கள் உங்கள் தலைமை ஏற்கும் திறனை வளர்க்க உதவும். மக்களின் மேல் சுயநலமான, எல்லை மீறிய கட்டுப்பாட்டை செலுத்துவதைத் தவிர்க்கும்.

### உங்கள் திட்டங்களை எழுதவும்

யாருக்கு அறிவுரைத்து போதகம் செய்யப் போகிறீர்கள் ?

.....................................................................

முதன் முதலில் எத்தனைமுறை சந்திப்பீர்கள் ?


.....................................................................

உங்களுக்கு போதிக்க யாரும் இல்லை என்றால், பவுல்-தீமோத்தேயு பாடங்களை பயன்படுத்தும் யாரையாவது கேட்டுக் கொள்ளுங்கள். அப்படி யாரும் அகப்படவில்லை என்றால் நீங்களே இந்த அறிவுரைக்கும் சங்கிலியை தொடங்கி வையுங்கள். 2 தீமோத்தேயு 2:2 ல் பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறியபடி மற்றவர்களை பயிற்றுவிக்க ஆரம்பியுங்கள்.

## வழிகாட்டுதல் 5. **பெருகுவது குறித்த வேதாகமத்தின் வழிகாட்டுதலை பின்பற்றுங்கள்.**

இயேசு கூறியபடி எங்கெல்லாம் அப்போஸ்தலர்கள் சீஷர்களை உருவாக்கினார்களோ அங்கெல்லாம் சபைகள் பெருகின. இயேசுவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படியும் அடிப்படைகளை மேய்ப்பர்கள் அமைக்கும்போது இன்றும் தேவன் அவ்வாறே செயல்படுகிறார். இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் செய்தது போலவே நீங்கள் உங்கள் மந்தைக்குப் போதித்து, புதிய மந்தைகளுக்கு தலைவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். உதாரணமாக, பவுல் தீமோத்தேயுவுக்கு போதித்தார். அவர் விசுவாசமுள்ள மனிதர்களைப் பயிற்றுவித்தார். அவர்கள் பிறருக்கு பயிற்சி அளித்தனர் (2 தீமோ. 2:2). இதனால் பல சபைகள் உருவாயின.

இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் அறிவுறுத்தி போதித்தே பெரும்பாலும் புதிய தலைவர்களை பயிற்றுவித்தனர். புதிய சபைகள் பெருகும்போது அதே வேகத்தில் புதிய தலைவர்களை பயிற்றுவிக்க போதனை உதவுகிறது. ஏனெனில், தன் அல்லது தனது சபையின் உதவியால் உருவாகும் சபைகளுக்கு ஒவ்வொரு புதிய மேய்ப்பனும் மேலும் புதிய மேய்ப்பர்களை உருவாக்குகிறான்.



ஒவ்வொரு புதிய மேய்ப்பனும் தன்னைவிட அதிக அனுபவமுள்ள அறிவுரையாளன் தன் மந்தையை மேய்க்கும் திறனையும், தேவ வார்த்தைகளை உடனடியாக தான் சேவை செய்யும் மக்களுக்கு நடைமுறைப்படுத்துவதையும் கவனித்து, அதை மாதிரியாகக் கொண்டு, அவனைப் போலவே செய்கிறான் (1 கொரி.11:1).

தனது ராஜ்யத்தின் பெருக்கமும் வளர்ச்சியும் தாவரங்களைப் போன்றது என்று இயேசு வலியுறுத்தினார். நல்ல நிலத்தில் விதைத்தால் நூறு அத்தனையாய் பலன் கிடைக்கும் (மாற்கு 4).

பயிற்சிபெறும் ஒவ்வொருவரும் மேலும் புதிய மேய்ப்பர்களை உருவாக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துங்கள் இவ்வாறு மந்தை இயற்கையாகவே பெருகும். பயிற்சியும் சுவிசேஷம் அறிவித்தலும் ஒன்றாகச் செல்கிறது. உற்சாகமான ஜெபம், சுவிசேஷம் அறிவித்தல், தேவ உதவி ஆகியவற்றால் வேலையாட்களும் புதிய சபைகளும் பெருகும்.

ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் கொண்ட மக்கள் மத்தியில் பணிபுரியுங்கள். நற்செய்தியை மக்கள் நிராகரித்தால் காலில் உள்ள தூசியை தட்டிவிட்டு அங்கிருந்து அகன்று போங்கள் என்று இயேசு கட்டளை இட்டார். இதற்காக நாம் நமது குடியிருப்புகளை மாற்றத் தேவை இருக்காது. ஆனால் தேவன் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் மக்களை தேடும்படி நம்மை நகர்த்திச் செல்லும். பொதுவாக ஏழைமக்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை அதிகமாகக் கொண்டவர்களாய் இருப்பார்கள்.

இயேசுவையும் அப்போஸ்தலர்களையும் போல் போதிப்பது வல்லமையுள்ளதும் மந்தை பெருக உதவுவதுமாய் இருக்கிறது. இயேசு அப்போஸ்தலர்களிடம், சத்தியமும் நடைமுறைகளும் கொண்ட ஒரு "கட்டை" கொடுத்தார். அது தொடர் ஓட்டத்தில் பயன்படுத்தப்படும் ஒரு குச்சியைப் போல கனமற்றதாய் பிறரிடம் மாற்றிக்கொடுக்க எளிதானதாக இருக்கிறது.

அறிவுரையாளருக்கும் பயிற்சி பெறுபவர்க்கும் இடையில் இருக்கும் கவனிப்பு நிறைந்த உறவை தேவன் பயன்படுத்தி, சிறந்த தலைவர்களை உருவாக்கவும், சபைகளைப் பெருகப் பண்ணவும் 'குச்சியை' மற்றவர்களுக்கு மாற்றிக் கொடுப்பதை எளிதாக்குகிறார்.

எளிதாகவும் விரைவாகவும் பயின்று திரும்பவும் அதுபோல் செய்யக்கூடிய முறைகளைப் பயன்படுத்தியே ஒரு நல்ல பயிற்சியாளர் புதிய தலைவர்களைப் பயிற்றுவிக்கிறார். இதைக் கொண்டு அவர்களால் புதிய மேய்ப்பர்களை பயிற்றுவிக்க முடியும். மாதிரிகளைக் காட்டி போதிக்கும் போது பயிற்சி பெறுபவரிடம் இல்லாத பொருட்களை உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும்.

வேதாகமத்தில் இத்தகைய போதனை முறை ஒவருக்கு ஒருவர் மாறி மாறி பல தலைமுறைகளாக ஒரு சங்கிலித் தொடராக வளர்ந்தது. உதாரணங்களில் இவைகள் அடங்கும்.

**எத்திரோ** மோசேக்கு அறிவுரை கூறினான்.

**மோசே** யோசுவாவுக்கும், இஸ்ரவேல் மூப்பர்களுக்கும் போதித்தான். புதிதாக நியமிக்கப்பட்ட மூப்பர்களுக்கு உதவியாகவே முதலில் தேவன் பத்து கட்டளைகளைக் கொடுத்தார். 10 பேர் அடங்கிய சிறு குழுக்களிலேயே இந்தக் கண்காணிப்பு நடைபெற்றது (யாத்.18–20).

**யோசுவா** பிற இராணுவத் தலைவர்களுக்குப் பயிற்றுவித்தார்.

**தெபொராள்** பாராக்கிற்கு அறிவுரை புகன்றாள். இதன் விளைவாக பாராக் தேவனுக்காக ஒரு பெரும் போரை வென்றான்.

**ஏலி** சாமுவேலுக்கு போதித்தான்

**சாமுவேல்** சவுலுக்கும் தாவீதுக்கும் அறிவுரைத்தான். தாவீது இஸ்ரவேலின் மாபெரும் மன்னனான **அகித்தோப்பேல்,** நாத்தான் என்ற தீர்க்கதரிசிகளும் தாவீதுக்கு அறிவுரை கூறினர்.

**தாவீது** தனது இராணுவ தளபதிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் வழிகாட்டி, ஒன்றுபட்ட இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கினார்.

தாவீது தன் மகன் சாலொமோனையும் அறிவுரை கூறி ஆளாக்கினான்.

**சாலொமோன்** ஷீபாவின் ராணிக்கு போதித்தான். அவள் நீதி மொழிகள் என்ற வடிவில் சாலொமோனின் ஞானத்தைத் தன் மக்களுக்கு எடுத்துச் சென்றாள். அது தேவனுடைய பிரமாணங்களை நடைமுறைப்படுத்தியது.

**எலியா** எலிசாவுக்கு போதித்தான்.

**எலிசா** யோவாஸ் ராஜாவுக்கும் பிறருக்கும் அறிவுரை கூறினான்.

**தானியேல்** நேபுகாத்நேச்சார் இராஜாவுக்கு அறிவுரை கூறினான். பின்னர் இந்த இராஜா தேவனுக்கு முன்பாகத் தன்னை தாழ்த்தினான்.

**மொர்தேகாய்** எஸ்தருக்கு போதித்தான்

**எஸ்தர்** அகாஸ்வேரு இராஜாவுக்கு அறிவு புகட்டினாள். இதனால் தேவ ஜனங்கள் விடுதலை அடைந்தனர்.

**இயேசு** தனது பன்னிரண்டு சீஷர்களுக்குப் போதித்தார். அவர்கள் முதல் கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்தனர். பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் பவுலுக்கும் நூற்றுக்கணக்கான பிற தலைவர்களுக்கும் போதித்தனர்.

**பவுல்** தீத்துவுக்கும், தீமோத்தேயுவுக்கும் இன்னும் பலருக்கும் போதித்தார்

**தீமோத்தேயு** எப்பாப்பிராவுக்கும் பிற "விசுவாசமுள்ள மனிதர்களுக்கும்" போதித்தார்.

**எப்பாப்பிராவும்** பிற விசுவாசமுள்ள மனிதர்களும் "பிறருக்கும்" போதித்தனர் (2 தீமோ. 2:2) இது ஒரு தொடர் வினையாகி ஆசியாவில் பல சபைகள் தோன்றின.

**பிலிப்பு** எத்தியோப்பிய அதிகாரிக்கு போதனை செய்தார். அவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு வனாந்தரத்தில் ஞானஸ்நானம் எடுத்தான்.

**பிரிஸ்கில்லாவும் ஆக்கிலாவும்** அப்பொல்லோவுக்கு போதித்தனர். இதனால் ஊழியம் வளர்ந்து விசுவாசிகள் தொகையும் பெருகியது.

### உங்கள் திட்டங்களை எழுதுங்கள்

நீங்கள் இதுவரை மக்களுக்கு மரபான வகுப்பறை முறையில் மட்டுமே மக்களுக்கு போதித்து வந்திருப்பீர்களேயானால், சில நிமிடம் ஒதுக்கிக் கர்த்தரிடம் உங்களுக்கு உதவி செய்யுமாறு வேண்டுங்கள்.

உங்களுக்கு போதிக்க திறமையும், நேரமும் குறைவாக இருந்தால், யாருக்கு இந்த பொறுப்பைக் கொடுப்பது என்பதைக் காட்ட கர்த்தரிடம் வேண்டுங்கள். இதனால் இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்தது போல தலைவர்களை உங்கள் சபையும் உருவாக்க முடியும்.


2 தீமோத்தேயு 2:2 கூறுவது போல பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் ஒருவர் அதே சமயம் புதிய பணியாளர்களுக்கு பயிற்சியாளராகவும் விளங்க முடியும். இத்தகைய பயிற்சி முறையால் உங்கள் சபையும் புதிய சபையும் புதிய தலைவர்களை தொடர்ந்து வேகமாக உருவாக்க முடியும். கிறிஸ்துவின் பரந்துபட்ட இயக்கம் வேகமாக முன்னேறும். நீங்கள் பயிற்சி கொடுக்கும் ஒருவர் சீக்கிரத்தில் மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்க வேண்டும். அவர்கள் பயிற்சி அளிக்கக் கூடிய பணியாளர்களை அறிவீர்களேயானால் அவர்கள் பெயரை எழுதுங்கள். அறியாவிட்டால் கண்டுபிடியுங்கள்.

---

உங்களுக்கு பயிற்சியில் உதவும் பிற பயிற்சியாளர்களின் பெயர்களை எழுதுக.

---

## வழிகாட்டல் 6 **திருமணமான தலைவர்கள் தங்கள் மனைவி மற்றும் மக்கள் மேல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்**



தனது குடும்பத்தின் மேல் அக்கறை எடுத்துக்கொள்ளாத ஒரு விசுவாசி விசுவாசத்தை மறுதலிக்கிறவனும், ஓர் அவிசுவாசியை விட மோசமானவனும் ஆவான் என்று பவுல் அப்போஸ்தலர் எச்சரிக்கிறார் (1 தீமோ.5:8).

ஒரு நல்ல மேய்ப்பன் முதலில் தனது சொந்த குடும்பத்தை கவனத்தோடு கண்காணிக்கிறான்.

பல சபைகளும் குடும்பங்களும் துன்பப்பட காரணம், சில மேய்ப்பர்கள் பிறரோடு கூடுதல் நேரம் செலவிட்டு, தங்கள் சொந்த மனைவியையும், பிள்ளைகளையும் புறக்கணிப்பதே.

**உங்கள் திட்டங்களை எழுதவும்**

உங்கள் மனைவியையும் குழந்தைகளையும் சரிவர கவனிக்க நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## வழிகாட்டல் 7: பயிற்சி பெறுபவர்கள் தேவ வார்த்தையில் ì தங்கத்தைì க் கண்டடையட்டும்

சும்மா "கேட்பவராக மட்டுமோ" அல்லது வெறும் வாசகராக மட்டுமோ அல்லாமல் ஒவ்வொரு மேய்ப்பரும் தீவிரமாகக் கற்பவராக இருக்க உதவி செய்யவும். பிறர் ஒவ்வொரு விஷயங்களையும் கற்றுக்கொடுக்கக் காத்திராமல், தங்கள் மந்தைக்குத் தேவையான சத்தியங்களை ஒவ்வொருவரும் கண்டறியட்டும்.

ஒரு மாணவர் தானாகவே கற்றறியக் கூடியதை போதிக்க வேண்டாம்.

தேவன், அவரும் அவரது மந்தையும் செய்ய விரும்புவதை, கேள்விகள் கேட்பதின் மூலம் சிந்திக்க வையுங்கள். பவுல்-தீமோத்தேயு பாடங்கள் அவர் வேதாகமத்தில் கண்டறிய வேண்டியதை குறிப்பிட்டு உணர்த்துகின்றன.

## வழிகாட்டுதல் 8 **போதிக்கும் நேரத்தில் ஐந்து விஷயங்களைச் செய்யுங்கள்**

இந்த ஐந்து முக்கிய விஷயங்களாவன ஜெபித்தல், கவனித்துக்கேட்டல், திட்டமிடுதல், மீள்பார்வை செய்தல், பொறுப்பளித்தல்

**1) பயிற்சி நேரத்திற்கு முன்னும், பயிற்சியின் போதும், பின்னும் ஜெபிக்கவும்**

பயிற்சி நேரம் தொடங்கும் போது, கலந்து கொண்டிருக்கும் அனைவரையும் வழிகாட்டும்படி கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள்.

பயிற்சி நேரத்தின் போது உங்களுக்கு விசேஷ வல்லமை அல்லது ஞானம் தேவைப்படும் ஒரு கேள்வியையோ, முடிவையோ, பிரச்சினையையோ கையாளும் போது எல்லாம் ஜெபிக்கவும்

பயிற்சி நேரம் முடிவடையும் போது, நீங்கள் திட்டமிட்டதை செய்வதற்கு, உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் வல்லமை தருமாறு கர்த்தரை வேண்டிக் கொள்ளவும்.

**2) ஒவ்வொரு பயிற்சி மாணவர் கூறுவதையும் கவனித்துக் கேளுங்கள். தானும் தனது மந்தையும் என்ன செய்கிறது என்பதை ஒவ்வொருவரும் கூறட்டும்.**

வெற்றியையும் தோல்வியையும் புதிய மேய்ப்பர்கள் கூறும்படி அவர்களை வற்புறுத்தவும்.

அதற்கு முந்திய பயிற்சி காலத்தில் (session) அவர்கள் திட்டமிட்டதையும், அவர் தற்போது கூறும் அறிக்கையையும் ஒப்பிட்டு நோக்குங்கள்.

**3) ஒவ்வொருவருடைய களப்பணிகளையும் (field work) திட்டமிடவும்**

அடுத்த வாரத்தில் அல்லது மாதத்தில் அவரும் அவரது சபை மக்களும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் திட்டமிட உதவுங்கள்.

பயிற்சி மாணவர் அறிவித்த தேவைகளுக்கு ஏற்ப காரியங்களை ஆற்றத் திட்டமிடவும்.

தனது சபையுடன் சேர்ந்து செய்ய பயிற்சி மாணவர் ஒத்துக்கொண்ட ஒவ்வொரு விஷயத்தையும் எழுதவும்

தொடர்ந்து ஏற்படும் பிரச்சினைகளுக்கு நேரத்தை ஒதுக்குவதைத் தவிர்க்கவும். எப்போதும் புதிய நடவடிக்கைகளைத் திட்டமிடவும்.

சாத்தான் கொண்டுவரும் பிரச்சினைகளிலேயே சும்மா மூழ்கி அவனோடு சேர்ந்து நடனமாட வேண்டாம்." சபையார் இதுவரை செய்யாத செயல்பாடுகளை தொடங்கி வையுங்கள். அல்லது இன்னும் பலவீனமாக இருக்கும் செயல்பாடுகளை பலப்படுத்துங்கள். நேர்மறையான விஷயங்களில் கவனம் செலுத்தி சபையைத் தொடர்ந்து கட்டுங்கள்.

பயிற்சியாளரும் பயிற்சி பெறுவோரும் இந்த திட்டத்தின் ஒரு நகலை வைத்துக் கொண்டு, அடுத்த பயிற்சி நேரத்தில் அதை ஆய்ந்து நோக்கவும்.



என்னுடைய இராகத்துக்கு ஏற்ப ஆடிக் கொண்டிரு

**4. சென்ற பயிற்சி காலத்தில் வாசிக்க ஒதுக்கித்தரப்பட்ட பாடங்களை மீள்பார்வை செய்க**

பயிற்சி மாணவர் வாசித்துக் கற்றுக்கொண்டது என்ன என்பதை கேட்டறியுங்கள். அவர் அதைப்பற்றி கூறட்டும்.

அவர் ஒரு பாடத்தை நன்கு கற்று அறியாவிட்டால் அதை மீண்டும் அவர் வாசிக்கும்படி செய்யுங்கள். தற்போது ஒதுக்கப்பட்டவைகளை அவர் சரியாக கற்றறியாத வரை வேறு பாடத்தை அவருக்கு ஒதுக்கித் தர வேண்டாம்.

தான் கற்றதைப் பற்றி மாணவர் பேசும்படி செய்யுங்கள்.

**5. தற்போதைய தேவைகளுக்கும், சேவை செய்யும் வாய்ப்புகளுக்கும் ஏற்ற பாடத்தையே கற்கும்படி அளியுங்கள்**

எல்லா பயிற்சி பெறும் மாணவருக்கும் ஒரே பாடத்தையே ஒதுக்கி கற்பதற்குத் தரவேண்டாம். ஒவ்வொரு மாணவருக்கும் அவரது மந்தைகளின் தேவைகளுக்கும், சேவை செய்யும் வாய்ப்புகளுக்கும் ஏற்ற பாடத்தையே படிக்க ஒதுக்குங்கள்.

மீண்டும் அவரை சந்திக்க நீண்ட நாளாகும் என்ற நிலை இருந்தாலொழிய, மிகவும் புதிய மாணவருக்கு ஒரே நேரத்தில் ஒரு பாடத்தை மட்டுமே கற்கும்படி ஒதுக்க வேண்டும்.

பவுல்-தீமோத்தேயு பயன்படுத்துவோர் பட்டியலை உபயோகப்படுத்தவும் (வழிகாட்டல் 2).

## உங்கள் திட்டத்தை எழுதவும்

உங்கள் மாணவருடன் ஒரு பயிற்சி நேரத்தில் நீங்கள் செய்ய வேண்டிய ஐந்து விஷயங்களையும் மனப்பாடம் செய்து பின் பாராமல் இங்கே எழுதவும்

1. ......................................
2. ......................................
3. ......................................
4. ......................................
5. ......................................

உங்கள் மாணவருக்கு பவுல்-தீமோத்தேயு பாடங்களை எவ்வாறு பெறுவீர்கள் ?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................


..........................................................................................................

## வழிகாட்டல் 9 உடனடியாக நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் பவுல்-தீமோத்தேயு பாடங்களை உபயோகப்படுத்தவும்

புதிய தலைவருக்கான ஒவ்வொரு பவுல் - தீமோத்தேயு பாடமும் மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. வேத தியானம் மூலமாக உங்களை ஆயத்தப்படுத்துங்கள்
2. வரும் வார நடவடிக்கைகளைத் திட்டமிடுங்கள்
3. வரும் ஆராதனை நேரத்தைத் திட்டமிடுங்கள்

**1) வேத தியானத்தின் மூலமாக உங்களை ஆயத்தப்படுத்துங்கள்**




நீங்க என்ன செய்கிறீர்கள், அதை எவ்வாறு செய்கிறீர்கள் என்பதற்கு வேதாகமத்தை உங்கள் வழிகாட்டியாக உபயோகிக்கவும்.

உங்கள் போதனைக்கு ஓர் ஆதாரமாக மட்டுமன்றி, நீங்கள் எப்படி போதிக்கிறீர்கள், சுவிசேஷம் அறிவிக்கிறீர்கள், ஒழுங்கு-படுத்துகிறீர்கள், ஆராதனை செய்கிறீர்கள் என்பதற்கு வேத வார்த்தையை வழிகாட்டியாகப் பயன்படுத்தவும்.

தேவ வார்த்தையில் இருந்து அறிந்து கொள்ள உதவியாக ஒவ்வொரு பாடத்திலும் ஒரு பட்டியல் உள்ளது. அடுத்த ஆராதனையின் போது நீங்கள் இந்த விஷயங்களைப் போதிக்கலாம். அறிந்து கொள்ள கொடுக்கப்பட்டவைகளைப் பற்றி கேள்விகள் கேட்கலாம்.

**2) வரும் வார நடவடிக்கைகளைத் திட்டமிடுங்கள்**

ஒவ்வொரு பாடத்திலும் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களின் ஒரு பட்டியல் உண்டு. நீங்களும் மற்ற விசுவாசிகளும் வாரநாட்களில் அதைச் செய்யலாம். தற்போதைய தேவைக்கும், உள்ளூர் சம்பிரதாயங்களுக்கு ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள். பிறவற்றை விட்டு விடுங்கள்.




திட்டங்களை ஆராதனையின் போது அறிவியுங்கள். விசுவாசிகள் தங்களுடைய விதவிதமான ஊழியங்களைக் கொண்டு கிறிஸ்துவுக்கு சேவை செய்ய உதவுங்கள்.

ஆராதனையின் போது உங்கள் போதனை விசுவாசிகளை அவர்களது செயல்பாடுகளுக்கு ஆயத்தப்படுத்துவதாக இருக்க வேண்டும். யாராவது ஒரு கொள்கையை அதற்கு தொடர்புடைய கடமையோடு சேர்த்து நடைமுறைக்கு ஏற்றவாறு போதிக்காவிட்டால் அவர் தேவ வார்த்தையைத் தவறாக பயன்படுத்துகிறார் என்பதே உண்மை (யாக். 1:22; எபே. 2:8-10; 2 தீமோ. 3:16-17).

- ஒருவரை ஒருவரும் (கலா. 5:13).
- ஒவ்வொரு குடும்பத்தையும் (எபே 5:21-33; 6:1-4).
- சுற்றி இருக்கும் சமுதாயத்தையும் (மத். 5:13-14).
- மற்ற சபைகளையும் (அப். 15:41), அந்த வாரத்தில் ஆசீர்வதிக்கத்தக்கதாக விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும் என்பதை உங்கள் உதவியாளர்களுடன் சேர்ந்து திட்டமிடவும்.

3) வரும் ஆராதனைக்காகத் திட்டமிடுங்கள்

குழு ஆராதனை நேரத்தில், உங்களிடம் பயிற்சி பெறுவோர் மந்தையில் உள்ள, பிள்ளைகள் முதற்கொண்டு யாவரும் கலந்துகொண்டு தங்களது ஆவிக்குரிய வரங்களை உபயோகித்து ஒவருக்கொருவர் போதிக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துங்கள். பிள்ளைகளுக்கான பவுல்-தீமோத்தேயு பாடங்கள், வேதக் கதைகளை நாடகமாக்கவும், கவிதை பாடவும், சங்கீதங்களைப் பாடவும், கேள்விகள் கேட்கவும் அவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

‘உங்கள் குழு சிறியது. அதனால் நன்றாகத் திட்டமிட வேண்டிய அவசியமில்லை’ என்று சாத்தான் புதிய மேய்ப்பர்களின் காதுகளில் கிசுகிசுக்கிறான். ஆனால் எல்லாம் வல்ல தேவ பிரசன்னத்துக்குள் தங்கள் மந்தையை வழிநடத்த நன்றாக ஆயத்தம் செய்யாத மேய்ப்பர்கள் பாவம் செய்கிறார்கள்.



ì உங்கள் குழு சிறியது. எனவே நல்ல முறையில் திட்டமிடத் தேவை இல்லை!ஹா! ஹா! ஹா!

ஒரு பவுல்-தீமோத்தேயு பாடம் பல ஆராதனை நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தாலும் உங்கள் மந்தைக்குத் தேவையானதை மட்டுமே தெரிந்து கொள்ளுங்கள். மற்றவைகளை விட்டுவிடலாம்.

**உங்கள் திட்டங்களை எழுதவும்**

உங்கள் பயிற்சியாளர்களுக்கு முதன்முதலில் எந்தப் பாடங்களைத் தெரிந்து எடுத்துள்ளீர்கள்?

............................................................................................................

அடுத்த ஆராதனை நேரத்துக்கு என்ன திட்டங்களைத் தீட்டி இருக்கிறீர்கள்?

............................................................................................................

............................................................................................................

அடுத்த ஆராதனை நேரத்துக்கு உங்களிடம் பயிற்சி பெறுபவர்கள் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்கள்?

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

## வழிகாட்டல் 10. உங்களிடம் பயிற்சிபெறுவோர் தாங்கள் போதிக்கும் முறையை வெவ்வேறு வகையில் மாற்றுவதற்கு உதவி செய்க

இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் வெவ்வேறு வகையான போதனை முறைகளைப் பயன்படுத்தினர். எல்லோரும் ஏதாவது ஒருவகையில் பங்குபெற வேண்டும் என்று பவுல் வலியுறுத்தினார். 1 கொரிந்தியர் 14:26 கூறுகிறது. “நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷை பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான்.” இத்தகைய உற்சாகமான பங்கேற்பின் போது பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக செயல்படுகிறார். பவுல்-தீமோத்தேயு பாடங்கள் ஆராதனைநேரத்துக்கு என பல வகையான கற்கக் கூடிய நடவடிக்கைகளை விவரிக்கின்றன.

நாற்காலிகளை அரைவட்டமாகவோ வட்டமாகவோ போட்டுக் கொண்டால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியும்.

கேள்விகள் கேட்கும் போதே மக்கள் அதிகம் கற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் சுதந்திரமாக கேள்விகளைக் குறித்து விவாதிக்கட்டும்.

ஒன்றோ அல்லது இரண்டோ நபர்களே முழு நேரமும் பேசிக்கொண்டே இருக்க அனுமதிக்க வேண்டாம். “இப்போது, இதுவரை பேசாத ஒருவர் பேசக் கேட்போம். எல்லோரும் தங்கள் எண்ணங்களைத் தெரிவிக்க, உதாரணம் கொடுக்க கேள்வி கேட்க, எதையாவது தெரிவிக்க விரும்புகிறோம்”

வெட்கப்படும் ஒருவரையும் இக்கட்டான சூழ்நிலைக்குள் இழுத்துவிட வேண்டாம். அவர்கள் அமைதியாக இருக்க விரும்பினால் அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்.

சிறு குழுக்களில் போதனை வெறும் விரிவுரையாக மட்டுமே இருக்கக்கூடாது. விரிவுரைக்கு அனுபவம்

வேதாகமத்தை நாடகப் பாணியில் வாசிப்பதே வசனங்களை தீவிரமாக கற்பதற்கு ஒரு வழியாகும். பெரும்பாலான புதிய மேய்ப்பர் பாடங்களும், எல்லா சிறுவர்க்கான பாடல்களும், நாடகப்பாணியில் நடிக்க அல்லது வாசிக்க குறைந்தபட்சமாக ஒரு வேதாகமக் கதையையாவது கொண்டிருக்கும். பிறர் முடியுமானால் வேதாகமக் கதைகளில் வரும் உரையாடல்களை வாசிக்கலாம் அல்லது நடிக்கலாம். உதாரணமாக, கெட்ட குமாரன் (லூக் 15:11-32). கதையில் பேசப்படும் வார்த்தைகளைத் தவிர மற்றவற்றை ஒரு கதை கூறுபவர் வாசிக்கலாம். மற்றவர்கள் தகப்பன், இளைய குமாரன், மூத்தவன், வேலைக்காரன் ஆகியோர் பேசுபவற்றை வாசிக்கலாம்.

மக்கள் சிறு நாடகங்களை நடிக்கலாம். வேத சத்தியங்கள் நடிக்கப்படும் போது அதைப் பார்க்கும் மக்கள் எளிதாகக் கற்றுக் கொள்வார்கள். தாங்களே நடிக்கும்போது இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ள முடியும்.

நாடகங்களை அரங்கேற்றும் போது உடைகள், ஒத்திகை போன்றவற்றில் விரிவான கவனம் செலுத்த வேண்டும். இப்படி செய்வது வேதாகம சத்தியத்தில் இருக்க வேண்டிய கவனம் சிதறி, நடப்பை இரசிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

நடிப்பவர்கள் பெரியவர்களாகவோ, பெரிய பிள்ளைகளாகவோ இருந்தால் பேச வேண்டியவற்றை மனப்பாடம் செய்வதை விட, பொதுக்கருத்தை மனதில் வைத்து சுயமாகவே பேசுவது இன்னும் சிறப்பாக இருக்கும். உதாரணமாக கெட்ட குமாரன் கதையை நாடகமாக நடிக்கும் போது, கதை கூறுபவர் கதையைக் கூறிவிட்டு, “இப்போது கெட்ட குமாரன் கூறுவதைக் கேட்போம்” என்று கூற கெட்ட குமாரனாக நடிப்பவர் அந்தப் பகுதியை வாசிக்கலாம் அல்லது பேசலாம். இரண்டு பிள்ளைகள் கொழுத்த ஆட்டைப் போல நடிக்கலாம் (ஒரு போர்வையை மேலே போட்டு அவர்களை சுற்றி நடக்க வைத்து மெதுவாக ஆடு போல கத்தலாம்).

சரித்திரத்தில் இதுவரையிலும் அதிகமாக எடுத்தாளப்பட்டதும், மிகவும் மக்களைக் கவர்ந்ததுமான ஒரு பிரசங்கத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். கடற்கரையில் திரளான மக்களுக்குப் போதித்த பிறகு, இயேசு தமது பன்னிரண்டு சீஷர்களுடன் ஒரு மலையில் ஏறினார். அங்கு மேடையோ நாற்காலிகளோ இல்லை. அவர் அமர்ந்து மற்றவர்களுடன் ஓர் ஆழமான உரையாடலை நடத்தினார். அதுவே புகழ்பெற்ற மலைப்பிரசங்கம் ஆகும். (மத். அதி. 5-7).

**உங்கள் திட்டங்களை எழுதவும்**

அடுத்த முறை சபை கூடும்போது நீங்கள் எதைப்பற்றி போதிக்கப்போகிறீர்கள்?

..............................................................................................

..............................................................................................

கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கும் போது, குழந்தைகள் உட்பட அனைத்து விசுவாசிகளும் சிறந்த முறையில் பங்கேற்கும்படி எந்த வகையில் அடுத்த ஆராதனையின் போது போதிக்கப் போகிறீர்கள்.

..............................................................................................

## வழிகாட்டல் 11. **வேதாகமப்படி புதிய மேய்ப்பர்களை நியமித்தல்**

மேலே கைகளை வைத்து, தேவ வல்லமை நீடித்து இருக்கும்படி ஜெபிப்பதே வேதாகமப்படி புதிய மேய்ப்பர்களை நியமித்தல் ஆகும்.

இவர்கள் முதிர்ந்தவர்களாகவும், 1 தீமோத்.3:1-7ல் பட்டியல் இடப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றவர்களாகவும், இருக்க வேண்டும். புதிதாக மாறியவர்களாக இருக்கக் கூடாது. நிரந்தரமாக அவர்களை கண்காணிக்கும் மூப்பர்களாக நியமிக்கும் முன்னர் அவர்கள் தங்கள் தகுதியை நிரூபித்திருக்க வேண்டும்.

புதிய தலைவர்களுக்கு மனிதன் உருவாக்கும் தகுதிகளை சேர்க்கும்போதே மோசமான விஷயங்கள் நடைபெறுகின்றன. அல்லது வேதாகமம் கூறும் தகுதிகளை பின்பற்றாத போதும் இது நேரலாம். இவை இரண்டுமே தேவ மக்களுக்குத் துன்பத்தைக் கொண்டு வருகின்றன.

கைகளை வைத்து நியமிக்கப் படுவதற்கான தகுதிகளைப் பெறாதவர்களாய் இருந்தாலும் அவர்களைப் புதிய தலைவர்களாக பயிற்றுவிக்கலாம். ஏனெனில் பயிற்சி இல்லாமல் அவர்கள் ஒரு போதும் அத் தகுதிகளைப் பெற முடியாது. அனுபவம் வாய்ந்த ஒரு தலைவரின் மேற்பார்வையில் அவர்கள் தங்கள் குடும்பத்தையோ தேவனைத் தேடும் ஒரு சிறு கூட்டத்தையோ, புதிய சபைகளில் சேரும் புதிய விசுவாசி-களையோ அவர்கள் கண்காணிப்பு செய்யலாம். தகுதி பெறாத வரையில் அவர்களை அதிகார பூர்வமாக தலைவராக அங்கீகரிக்கக் கூடாது. மாறாக அவர்கள் தற்காலிக, பயிற்சி பெறும் மேய்ப்பர்களாக அவர்கள் சேவை செய்யலாம்.

### உங்கள் திட்டங்களை எழுதுங்கள்

உங்கள் பயிற்சியின் கீழ் இருக்கும் புதிய மேய்ப்பர்களில் யார் யார் தற்காலிகமாக நியமிக்கப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

Copyright © 2003 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net